தினகரன்
ஏப்ரல் 26, 2026 ஞாயிற்றுக்கிழமை

### ஜிப்மர் மருத்துவ கல்லூரியில்

# சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் 41வது தேசிய மாநாடு



▶ புதுச்சேரி ஜிப்மர் மருத்துவ கல்லூரி வளாகத்தில் நுண்ணுயிரியல் துறை சார்பில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் 41வது மாநாடு நேற்று நடைபெற்றது.

புதுச்சேரி, ஏப். 26: புதுச்சேரி ஜிப்மர் மருத்துவ கல்லூரி வளாகத்தில் உள்ள ஜவஹர்லால் முதுகலை மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நுண்ணுயிரியல் துறை சார்பில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாடமியின் 41வது தேசிய மாநாடு நேற்று தொடங்கியது. இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாடு 'ஒரே ஆரோக்கியம்- மருத்துவ அறிவியலில் சமீபத்திய முன்னேற்றங்கள்' என்ற தலைப்பில், கல்வி பரிமாற்றம் மற்றும் அறிவியல் விவாத தளமாகவும் அமைந்துள்ளது.

இந்த மாநாடு நுண்ணுயிரியல் துறைத் தலைவர் பேராசிரியர் ராகுல் தோதாப்கர் வழிகாட்டுதல்படி, மாநாட்டை அத்துறையை சேர்ந்த பேராசிரியர்கள் ராகேஷ் சிங், ராக்கி பிஸ்வாஸ், நோயல் ஜோசப் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இந்த மாநாட்டின் தொடக்க விழாவின் சிறப்பு விருந்தினராக ஜிப்மரின் இடைக்கால இயக்குநர் பேராசிரியர் காதம்பரி, முன்னாள் இயக்குநர் பேராசிரியர் பரிஜா, ஐஎம்எஸ்ஏ தலைவர் ஜகதீசன், செயல் இயக்குநரும், பொதுச்செயலாளருமான துக்ரால், மற்றும் ஐஎம்எஸ்ஏ புதுச்சேரி பிரிவு தலைவர் பேராசிரியர் சண்முகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, ஒரே ஆரோக்கியம் என்பது மனிதர், விலங்கு மற்றும் சுற்றுசூழல் ஆரோக்கியத்தை ஒருங்கிணைக்கும் முழுமையான அணுகுமுறை எனவும், சுகாதாரம், வேளாண்மை மற்றும் சுற்றுசூழல் துறைகளுக்கிடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது அவசியம் என வலியுறுத்தி சிறப்புரையாற்றினர்.

மேலும் இந்த மாநாட்டில், தொற்றுநோய்கள், தொற்றில்லா நோய்கள், புற்றுநோய், சுகாதாரத்தில் செயற்கை நுண்ணறிவு, மூலக்கூறு கண்டறிதல், மருந்து கண்காணிப்பு, பொது சுகாதார கண்காணிப்பு மற்றும் புதிய சிகிச்சை முறைகள் போன்ற பல துறைகளில் தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதில் பத்மஸ்ரீ விருது பெற்ற மருத்துவர்கள் பழனிவேல், மோகன், தியாகராஜன் மற்றும் பேராசிரியர் சண்முகம் ஆகியோர்களுக்கு மருத்துவ அறிவியலில் செய்த சிறப்பான பங்களிப்புக்காக ஐஎம்எஸ்ஏ சர்வதேச உரை விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த மாநாட்டின் முக்கிய நிகழ்வான ஐஎம்எஸ்ஏ பட்டமளிப்பு விழா இன்று (26ம் தேதி) நடைபெற உள்ளது. இதில் தகுதி பெறும் உறுப்பினர்களுக்கு எப்ஐஎம்எஸ்ஏ பட்டம் வழங்கப்படுகிறது.

தினமணி
ஞாயிற்றுக்கிழமை, 26 ஏப்ரல் 2026

# ஜிப்மரில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாதெமியின் 41-ஆவது தேசிய மாநாடு தொடக்கம்




புதுச்சேரி ஜிப்மரின் இடைக்கால இயக்குநர் பேராசிரியர் டி. காதம்பரி தலைமையில் சனிக்கிழமை தொடங்கிய சர்வதேச மருத்துவ அறிவியல் அகாதெமியின் மாநாடு.

**புதுச்சேரி, ஏப். 25:** ஒரே ஆரோக்கியம் என்பது முழுமையான அணுகுமுறை என்று ஜிப்மரின் இடைக்கால இயக்குநர் பேராசிரியர் டி. காதாம்பரி கூறினார்.

ஜிப்மரில் சர்வதேச மருத்துவ அறிவியல் அகாதெமியின் 41-ஆவது தேசியமாநாடு சனிக்கிழமை தொடங்கியது.

ஒரே ஆரோக்கியம்- மருத்துவ அறிவியலில் அண்மைக்கால முன்னேற்றங்கள் எனும் தலைப்பில் இரண்டு நாள் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து 4 ஆயிரம் உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

தொடக்க விழாவில் பேராசிரியர் காதம்பரி பேசுகையில், ஒரே ஆரோக்கியம் என்பது மனிதன், விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை ஒருங்கிணைக்கும் முழுமையான அணுகுமுறை. மேலும், சுகாதாரம், வேளாண்மை, சுற்றுச்சூழல் துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஜிப்மரின் முன்னாள் இயக்குநர் எஸ்.சி. பரிஜா பேசுகையில், நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் பிரச்னையை மனிதர், விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் துறைகளை ஒருங்கிணைத்துக் கையாள வேண்டியது அவசியம் என்றார்.

இந்த அகாதெமியின் புதுச்சேரி தலைவர் ஜே. சண்முகம் பேசுகையில், விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்களைத் தடுப்பதில் தொடர்ச்சியான கண்காணிப்பு அவசியம் என்றார். அகாதெமியின் தலைவர் கே. ஜகதீசன், செயல் இயக்குநரும், பொதுச் செயலருமான ஆர்.கே. துக்ரால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பத்மஸ்ரீ விருது பெற்ற மருத்துவர் சி. பழனிவேல், மருத்துவர் வி.மோகன், மருத்துவர் எஸ்.பி. தியாகராஜன் மற்றும் பேராசிரியர் ஜே. சண்முகம் ஆகியோருக்கு மருத்துவ அறிவியலில் செய்த சிறப்பான பங்களிப்புக்காக இந்த அகாதெமியின் சர்வதேச உரை விருதுகள் வழங்கப்பட்டன.

மாநாட்டில் தொற்றுநோய்கள், தொற்றாத நோய்கள், புற்றுநோய், சுகாதாரத்தில் செயற்கை நுண்ணறிவு, மூலக்கூறு கண்டறிதல், மருந்து கண்காணிப்பு, பொது சுகாதார கண்காணிப்பு மற்றும் புதிய சிகிச்சை முறைகள் குறித்து பல்வேறு பிரிவுகளில் விவாதங்கள் நடைபெறவுள்ளன.